மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஏற்கனவே ஒரு தடை இருந்தது, ஊனமுற்றவர்களை மாணவர்கள் எதிரே கொண்டுபோய் நிறுத்தினால் மாணவர்கள் கேலி செய்வார்கள், அவர்கள் மாணவர்களிடையே புழங்குவது கடினம் என்ற நிலைமை இருந்தது. அதிலே இரண்டுவித கருத்துக்கள் இருந்தன. ஒன்று அவர்களிடம் மாணவர்களுக்கு இரக்க உணர்வு ஏற்படும் என்ற ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. இன்னொரு கருத்து மற்ற ஆசிரியர் களிடம் நடந்து கொள்வதைப்போன்று மாணவர்கள் அவர்களிடம் நடந்து கொள்ளமாட்டார்கள் என்று கருதப்பட்டது. கை கால் ஊனமுற்றவர்கள் வசதியற்றவர்களாக இருந்தால் அவர்களுக்கு ஏற்கனவே சக்கர வண்டி கொடுக்கப்பட்டது. அந்த வகையிலே விண்ணப்பித்து அவர்கள் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இப்படி ஊனமுற்றவர்களை எழுத்தாளர்களாகவும் ஸ்டேனோகிராபர்களாகவும் கால் நொண்டியாக இருந்தாலும் பரவாயில்லை, கை சரியாக இருந்தால் டைப்பிஸ்ட் போன்ற பணிகளிலே அமர்த்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

Village Courts.

* 186. *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether any decision has been taken regarding the constitution of Village Courts; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) இல்லை ஐயா.

திரு. என். கே. பழனிசாமி : சார், அன்றைய தினம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். இன்னும் பரிசீலனையில் இருக்கிறதா அல்லது அதைப் பற்றி முடிவு எடுக்கப் பட்டிருக்கிறதா ? அதைப்பற்றி முடிவு எடுப்பதிலே என்ன கஷ்டம் இருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த மசோதா பற்றி உயர்நீதி மன்றத் திலேயும் பார் கவுன்சிலிலேயும் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். வழக்குரைஞர்களைப் பொறுத்தவரையிலே இது கூடாது என்ற வாதத்தை எடுத்து வைக்கிறார்கள். இப்போது இருக்கிற நடைமுறை அமைப்பிலே எப்படிக் கொண்டுவர முடியும் என்று ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, வழக்குரைஞர்கள் வேறு காரணங்களுக்காக வேண்டாம் என்று சொல்லியிருக்கலாம். இதுபோன்ற கிராமப்புற கோர்ட்டுகளாலே எத்தனையோ விவகாரங்கள் தீர்க்கப்பட்டு இருக்

கின்றன, இவற்றை ஏற்படுத்துவதன் மூலமாகப் பொதுமக்களுக்கு வீண் பண விரையமும் ஆகாமல் இருக்கும். ஆகவே, இதை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆலோசித்த பின் முடிவு எடுக்கலாம்.

திரு. கே. என். குமாரசாமி : இந்த மாதிரி நீதிமன்றங்கள் இப்போது இல்லாத காரணத்தினால் முன்சிப் கோர்ட்களிலே சிவில் வழக்குகள் 6, 7 ஆண்டுகள் என்று நீட்டித்துக் கொண்டுபோய் மக்கள் அவஸ்தை படுகிறார்கள். முன்னாலே எல்லாம் பெரும்பாலும் வழக்குகள் கிராமக் கோர்ட்டுகள் மூலம் பைசல் செய்யப்பட்டிருக்கின்றன. அதே மாதிரி இப்போது பைசல் செய்யக் கூடிய முறையில் அரசு இதைக் கொண்டு வர ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1958 ஆம் ஆண்டிலேயே இப்படிப்பட்ட நீதி மன்றங்கள் எடுக்கப்பட்டுவிட்டன. அதை மீண்டும் வைக்க வேண்டுமா என்பதைப் பற்றி இருவேறு கருத்துக்கள் இருக்கின்றன. நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் இதற்காக ஒரு புதிய சட்டத்தைத் தயாரித்து இருக்கிறோம். எப்படிச் செயல்படுத்துவது என்பது பற்றி உயர்நீதி மன்றத் திடம் ஆலோசனை கேட்டோம். அவர்கள் சில குறிப்புகள் கொடுத்திருக்கி றார்கள். அதைப் பரிசிலித்துத்தான் முடிவு எடுக்க வேண்டும்.

சூரியகாந்தி எண்ணெய்

* 187 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சூரியகாந்தி விதைகளைப் பதப்படுத்துவதற்கான திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சூரியகாந்தி விதைகளைப் பதப்படுத்தும் இரண்டு ஆலைகளை (எண்ணெய் பிழியும் ஆலைகள்) ஒன்று கோயம்புத்தூர் கூட்டுறவு மாவட்ட விற்பனை வழங்கு சங்கத்தால், ஒண்டிப்புத்தூரிலும், மற் றொன்று தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை சம்மேளனத்தால் விருத்தாசலத்திலும் நிறுவ அரசு ஒப்புதல் அளித்துள்ளது. விரைவில் வேலை முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.